செ.கு. எண் : 79 நாள் : 19.7.11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 19 .7.2011

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம் மற்றும் நகரம் திரேஸ்புரம் கடல் பகுதியிலிருந்து 18.7.2011 அன்று கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற படகு எண். TN 12 FRPV 1028, திரேஸ்புரம் கடல் பகுதியிலிருந்து சுமார் 8 நாட்டிக்கல் மைல் தொலைவில் சேதமடைந்ததில், படகில் சென்ற திரு. சிலுவை என்பவரின் மகன் திரு. இன்னாசி, திரு. ரெக்ஸ் என்பவரின் மகன் திரு. டைசன் ஆகிய இருவரும் கடலில் மூழ்கி காலமானார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்